**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்.**

முன்னிலை: **திரு. S.கணேஷ், எம்.காம்., எம்.எல்.,**
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,(மு.கூ.பொ),
ஜெயங்கொண்டம்.

**2024ம் ஆண்டு நவம்பர் திங்கள் 26-ஆம் நாள் செவ்வாய்கிழமை**
**I.A.06/24 in O.S.152/2018**

1. வெங்கடேசன்,
2. செந்தமிழ்ச்செல்வன்,
3. பெரியசாமி, ... மனுதாரர்கள்/வாதிகள்

//எதிர்//

1. மகாராசன்,
2. சீனுவாசன், .. எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு இறுதியாக 07.11.2024-அன்று விசாரணைக்கு வந்ததில் மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.S,M.அன்புமொழி அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.M.பிரான்சிஸ்சேவியர் அவர்கள் முன்னிலையாகியும், மனு, பிரமாணவாக்குமூலம் மற்றும் எதிருரை ஆகியவற்றை பரிசீலித்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

**உத்தரவு**

இம்மனுவானது அபிடவிட்டில் கண்டுள்ள காரணங்களுக்காக, கடந்த 22.09.2023ந் தேதி என் வருகையின்மையால் தாவாவை தள்ளுபடி செய்து பிறப்பித்த உத்தரவினை ரத்து செய்து வழக்கை Restore செய்து தாவாவை மீண்டும் விசாரணைக்கு ஏற்றுக்கொள்ள உத்தரவாக வேண்டி இந்த மனு சி.பி.சி. ஆர்டர் 9 ரூல் 9-ன் படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. 2ம் மனுதாரரின் பிரமான வாக்குமூலத்தின் சுருக்கம்:-**

இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கில் 2ம் வாதி என்றும், இதனை மற்ற மனுதாரர்களுக்காகவும் தாக்கல் செய்வதாகவும், மனுதாரர்கள் எதிர்மனுதாரர்களுக்கு எதிராக பாதை புழுங்குரிமை விளம்புகை என்று தாவா தொடர்ந்துள்ள வழக்கில் மனுதாரர்கள் தரப்பில் விசாரணைக்காக கடந்த

22.09.2023 தந் தேதி வாய்தா போடப்பட்டிருந்த அன்றைய தேதியில் மனுதாரரின் தந்தை 1ம் மனுதாரரர் வெங்கடேசனுக்கு திமர் உடல்நலக்குறைவு ஏற்பட்டதால் திருச்சி மருத்துவமனைக்கு அழைத்து சென்றதால் மனுதாரரின் வழக்கறிஞரிடம் தகவல் கூற முடியவில்லை என்றும், பின்னர் வழக்கறிஞரை சந்தித்து வழக்கு விவரம் கேட்ட போது தான் மனுதாரர் கடந்த 22.09.2023ம் தேதி வாய்தாவிற்கு ஆஜராக முடியவில்லை என்பதும், தனது வழக்கறிஞருக்கும் அன்றைய தேதியில் உடல்நிலை சரியில்லாததால் நீதிமன்றத்திற்கு செல்லவில்லை என்று தெரியவந்தது என்றும், எனவே மனுதாரர்கள் ஆஜராகததால் வழக்கு தள்ளுபடியாகிவிட்டது என்றார், இது தற்செயல் நிகழ்வு என்றம், மனுதாரர் சமூகம் நீதிமன்றத்தில் ஆஜராகமல் போனது வேண்டுமென்றோ, அலட்சியத்தினாலோ ஏற்பட்டதல்ல என்றும், மேற்படி வழக்கில் மனுதாரருக்கு நல்ல கட்சி உள்ளது என்றும், எனவே கடந்த 22.09.2023 ந் தேதி என் வருகையின்மையால் தாவாவை தள்ளுபடி செய்து பிறப்பித்த உத்தரவினை ரத்து செய்து வழக்கை Restore செய்து தாவாவை மீண்டும் விசாரணைக்கு ஏற்றுக்கொள்ள உத்தரவாக வேண்டியது அவசியமும் நியாயமுமாகிறது இல்லையேல் மனுதாரர்களுக்கு வீண் கஷ்டமும் நஷ்டமும் ஏற்பட்டுவிடும் என்று மனுதாரர்கள் தரப்பில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. <u>1ம் எதிர்மனுதாரின் எதிருரையின் சுருக்கம் :-</u>

மனுதாரரின் மனுவில் கண்டுள்ள விபரங்கள் சரியல்ல என்றும், மனு சட்டப்படியும், நியாயப்படியும் நிலைக்கத்தக்கதல்ல என்றும், வழக்கின் வாய்தா 22.09.2023ல் விசாரணைக்காக வைக்கப்பட்டிருந்த அன்றைய தினம் 1ம் மனுதாரர் மிகவும் ஆரோக்கியமாக இருந்துள்ளார் என்றும், மேற்படி 3ம் மனுதாரர் பற்றி எதுவும் கூறப்படவில்லை என்றும், அவர் 22.093.2023ல் கோர்ட்டில் ஆஜராகி இருக்கலாம், அவரும் வரவில்லை என்றும், மனுதாரருகளுக்கு தங்கள் கட்சியின் பேரில் நம்பிக்கை இல்லை, அதானல் வழக்கு நடத்த தாயராக வரவில்லை என்றும், இது தற்செயலாக எதுவும் நடக்கவில்லை வேண்டுமென்றே திட்டமிட்டு கோர்ட்டில் ஆஜராகாமல் மனுதாரர்கள் இருந்துள்ளார்கள் என்றும்,

மனுதாரர்கள் மிகவும் அலட்சியமாகவும், அக்கரை இன்றியும், மெத்தனமாகவும் வழக்கை Restore செய்தாலும் மனுதாரர்கள் வழக்கு நடத்த முன் வருவார்களா? என்பது சந்தேகமே என்றும், எனவே மனுதாரர்களின் மனுவினை இவ்வெதிர்மனுதாரர்கள் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று குறிப்பிட்டு இவ்வெதிருரை எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. இருதரப்பு வாதம் கேட்கப்படவில்லை. இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணம் குறியீடு செய்யப்படவில்லை.

4. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய விசயம் யாதெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

**5. பிரச்சணைக்குரிய தீர்வு.**

மனுதாரர் தரப்பு மனுவில் எதிர்மனுதாரர்களுக்கு எதிராக பாதை புழுங்குரிமை விளம்புகை மற்றும் அதன் தொடர்பரிகாரமாக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாவா தொடர்ந்த நிலையில் மேற்படி வழக்கில் மனுதாரர் தரப்பில் விசாரணைக்காக கடந்த 22.09.2023 ந் தேதி வாய்தா போடப்பட்டிருந்த போது மனுதாரரின் தந்தை 1ம் மனுதாரரர் வெங்கடேசனுக்கு திடீர் உடல்நலக்குறைவு ஏற்பட்டதால் திருச்சி மருத்துவமனைக்கு அழைத்து சென்றதால் மனுதாரரின் வழக்கறிஞருக்கு தகவல் கூற முடியவில்லை என்றும், பின்னர் வழக்கறிஞரை சந்தித்து வழக்கு விவரம் கேட்ட போது தான் மனுதாரர் கடந்த 22.09.2023 ம் தேதி வாய்தாவிற்கு ஆஜராகாததாலும், மனுதாரரின் வழக்கறிஞருக்கும் உடல்நிலை சரியில்லாததால் மேற்படி தேதியில் நீதிமன்றத்திற்கு செல்லாததாலும் மேற்படி வழக்கானது தள்ளுபடியாகிவிட்டது என்று கூறியதாகவும், மேற்படி நிகழ்வு தற்செயல் நிகழ்வு என்றும், மனுதாரர் சமூகம் நீதிமன்றத்தில் ஆஜராகமல் போனது வேண்டுமென்றோ, அலட்சியத்தினாலோ ஏற்பட்டதல்ல என்றும், மேற்படி வழக்கில் மனுதாருக்கு நல்ல கட்சி உள்ளது என்றும், எனவே கடந்த 22.09.2023 ந் தேதி மனுதாரரின் வருகையின்மையால் தாவாவை தள்ளுபடி செய்து பிறப்பித்த உத்தரவினை ரத்து செய்து வழக்கை Restore செய்து தாவாவை மீண்டும் விசாரணைக்கு ஏற்றுக்கொள்ள உத்தரவாக வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

6. அதனை மறுத்து எதிர்மனுதாரர்கள் தரப்பு எதிருரையில் மனுதாரரின் மனுவில் கண்டுள்ள விபரங்கள் சரியல்ல என்றும், வழக்கின் வாய்தா 22.09.2023 ல் விசாரணைக்காக வைக்கப்பட்டிருந்த அன்றைய தினம் 1ம் மனுதாரர் மிகவும் ஆரோக்கியமாக இருந்ததாகவும், 3ம் மனுதாரர் பற்றி எதுவும் கூறப்படவில்லை என்றும், மனுதாரர் 22.09.2023 ல் கோர்ட்டில் ஆஜராகி இருக்கலாம் என்றும், மனுதாரர்களுக்கு அவர்களது கட்சியின் பேரில் நம்பிக்கை இல்லாததால் வழக்கு நடத்த தாயராக வரவில்லை என்றும், இது தற்செயலாக எதுவும் நடக்கவில்லை வேண்டுமென்றே திட்டமிட்டு நீதிமன்றத்தில் ஆஜராகாமல் மனுதாரர்கள் இருந்துள்ளார்கள் என்றும், மனுதாரர்கள் மிகவும் அலட்சியமாகவும், அக்கரை இன்றியும், மெத்தனமாகவும் வழக்கை Restore செய்தாலும் மனுதாரர்கள் வழக்கு நடத்த முன் வருவார்களா? என்பது சந்தேகமே என்றும், எனவே மனுதாரர்களின் மனுவினை இவ்வெதிர்மனுதாரர்கள் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

7. மேற்படி மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பு சங்கதிகளை இந்நீதிமன்றம் தீர பரிசீலித்ததில், மனுதாரர்கள் எதிர்மனுதாரர்களுக்கு எதிராக தாவா சொத்தை பொறுத்து பாதை புழுங்குரிமையை விளம்புகை செய்ய கோரியும் அதன் தொடர்பரிகாரமாக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தொடரப்பட்டு வழக்கு நடத்தி வந்த நிலையில் கடந்த 22.09.2023 அன்று விசாரணைக்காக வாய்தா போடப்பட்டிருந்து அன்று மனுதாரரின் தந்தையான 1ம் மனுதாரர் வெங்கடேசனுக்கு உடல்நலக்குறைவு ஏற்பட்டு திருச்சி மருத்துவமனைக்கு அழைத்து சென்றதால் மனுதாரரால் அவரது வழக்கறிஞருக்கு தகவல் கூற முடியாததாலும், அதே சமயத்தில் மனுதாரரின் வழக்கறிஞருக்கு உடல்நிலை சரியில்லாததாலும் நீதிமன்றத்திற்கு செல்லாததாலும் மேற்படி வழக்கானது தள்ளுபடியாகிவிட்டது என்று மனுதாரர்கள் மனுவில் குறிப்பிட்டுள்ளதை மறுத்து எதிர்மனுதாரர் தரப்பு எதிருரையில் 22.09.2023 அன்று 1ம் மனுதாரர் மிகவும் ஆரோக்கியமாக இருந்ததாகவும், திருச்சி மருத்துவமனைக்கு சென்றதற்கான ஆதாரம் எதுவும் தாக்கல் செய்யப்படாததால்

அது பொய் என்பது ஊர்ஜிதமாகிறது என்றும், மேலும் மனுவில் 3ம் மனுதாரரை பற்றி எதுவும் கூறப்படவில்லை என்றும், மனுதாரர்களுக்கு அவர்களின் கட்சியின் பேரில் நம்பிக்கை இல்லாததால் வழக்கு நடத்த தயாராக வரவில்லை என்றும் மறுத்துரைக்கப்பட்டுள்ளது.

8. மேற்படி மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவை பொறுத்து எதிர்மனுதாரர்கள் தரப்பில் சொல்லப்பட்ட மறுப்புரை சங்கதிகள் ஏற்புடையதாக உள்ளதாகவே இந்நீதிமன்றம் கருதுகின்றது. இருப்பினும் இந்நீதிமன்றம் விசாரணை நீதிமன்றம் என்பதால் தரப்பினர்களுக்கு அவரவர் தரப்பு கட்சியை முன்வைப்பதற்கு சந்தர்ப்பம் வழங்குவது அவசியமானது என்பதாலும், பல வழக்குகள் ஏற்படும் நிலையை தடுப்பதற்கும் வாய்ப்பாக அமையும் என்பதன்படி பார்க்கும்பொழுதும், இம்மனுவை அனுமதிப்பதால் இந்த எதிர்மனுதாரர்களுக்கு பெருத்த பாதிப்பு ஏதும் ஏற்படாது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

9. எனவே முடிவாக இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் நேரடியாக சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியாக்கம் செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, 2024ம் ஆண்டு நவம்பர் திங்கள் 26–ஆம் நாள் இன்று இந்நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

(ஒம்/–திரு.S.கணேஷ்., எம்.காம்., எம்.எல்.,)
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,(மு.கூ.பொ),
ஜெயங்கொண்டம்.

மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம்: இல்லை.
எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம்: இல்லை.

(ஒம்/–திரு.S.கணேஷ்., எம்.காம்., எம்.எல்.,)
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,(மு.கூ.பொ),
ஜெயங்கொண்டம்.